H

SINGAPORE – CAMBRIDGE
General Certificate of Education Advanced Level
Higher 2

# தமிழ்மொழி, இலக்கியம் 9577/3

தாள் 3

**TAMIL LANGUAGE AND LITERATURE** **SPECIMEN PAPER**

Paper 3 *With effect from 2022 examination*

**3 hours**

Additional Materials: Answer Book L

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 கொடுக்கப்பட்டுள்ள குறிப்பைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையளிக்கவேண்டும்.

2 விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுதவேண்டும்.



Singapore Examinations and Assessment Board

©MOE

**முக்கியக் குறிப்பு:** ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடை எழுதவேண்டும். மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை எழுதவேண்டும்.

## ‘அ’ பிரிவு

**நாவல், சிறுகதை**

**1** கொள்கைகளில் உறுதியாக உள்ளவர்கள் நாகரிக வாழ்வின் போலித்தனத்தை எதிர்த்துப் போராடத் தயங்கமாட்டார்கள் என்னும் உண்மையைச் ‘சமுதாய வீதி’ என்னும் நாவல் வெளிப்படுத்தும் பாங்கினை விளக்கி எழுதுக.

**(25 மதிப்பெண்கள்)**

**2** ‘விடியுமா?’ என்னும் சிறுகதை ‘விடிந்துவிட்டது’ என்று முடிகிறது. இவ்வாறு ஆசிரியர் முடித்திருப்பதே கதையின் வெற்றிக்குக் காரணமாக அமைகிறது. கருத்துரைக்க.

**(25 மதிப்பெண்கள்)**

## ‘ஆ’ பிரிவு

**கவிதை**

**3** திருவள்ளுவரின் ‘ஆள்வினையுடைமை’ என்னும் அதிகாரம் கூறும் கருத்துகளை வலியுறுத்தும் வகையில் கவிஞர் அமலதாசனின் ‘இரவிலும் பகலை எதிர்பார்’ என்னும் கவிதை அமைந்துள்ள பாங்கினை விளக்குக. **(25 மதிப்பெண்கள்)**

**4** ‘எந்நாளோ?’ என்னும் பாரதிதாசனின் கவிதையில் தமிழின மேம்பாட்டுக்கு அவர் விதைத்த சிந்தனைகள் குறித்து விளக்குக. **(25 மதிப்பெண்கள்)**

## ‘இ’ பிரிவு

**நாடகம்**

5 ‘சிங்கப்பூர் மாப்பிள்ளை’ என்னும் நாடகத்தின் வெற்றிக்கு அதன் பாத்திரப்படைப்பு மட்டுமே காரணம். கருத்துரைக்க. **(25 மதிப்பெண்கள்)**

6 தனிமனிதர் ஒருவர் கொண்டிருக்கும் கொள்கையை மாற்றும் வலிமை சமூகத்திற்கு உண்டு என்பதை ‘ஊஞ்சல்’ என்னும் நாடகத்தின் துணைகொண்டு ஆராய்க. **(25 மதிப்பெண்கள்)**

## ‘ஈ’ பிரிவு

**இலக்கியத் திறனாய்வு**

7 பின்னிணைப்பு 1-இல் கொடுக்கப்பட்டுள்ள ‘சித்தி’ என்னும் தலைப்பிலான சிறுகதையைப் படித்துத் திறனாய்வு நோக்கில் கதைக்கரு, பாத்திரப்படைப்பு, கதாசிரியர் உணர்த்த விரும்பும் கருத்துகள் ஆகியவற்றை விளக்கி எழுதுக. **(25 மதிப்பெண்கள்)**

8 பின்னிணைப்பு 2-இல் கொடுக்கப்பட்டுள்ள ‘கொடுக்கிறேன்...’ என்னும் தலைப்பிலான கவிதையைப் படித்து அதன் நயத்தை விளக்கி எழுதுக. கவிதையின் பாடுபொருள், பொருள் நயம், சொல் நயம் ஆகிய கூறுகளையொட்டி விடை அமைதல் வேண்டும். **(25 மதிப்பெண்கள்)**

முற்றும்

**பின்னிணைப்பு 1**

**சித்தி**

அங்கே மைதானங்கள் குறைவு. அவன் குடிக்கொண்டிருந்த அந்த இடம் காவல்துறைக்குச் சொந்தமானது. ரொம்ப நேரம் அவனைக் கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்த காவல்காரர் ஒருவர் அவனது ஓட்டத்தைத் தடை செய்தார். "தம்பி நீ நன்றாக ஓடுகிறாய். முன்னுக்கு வருவாய்," என்று சொல்லிச் சிறிது நேரம் பேச்சுக் கொடுத்தார்.

அந்த நாட்டில் விளையாட்டிற்கு அத்தனை மதிப்பு இருந்ததாகத் தெரியவில்லை. இருந்தபோதிலும் வீரர்களைப்பற்றித் தொலைக்காட்சி செய்திகள் மூலமாக மக்கள் அறிந்து கொண்டிருந்தார்கள். கஷ்டம் நிறைந்த வாழ்க்கையை எந்தவித உணர்வுமில்லாது இயல்பாகவே அவர்கள் ஏற்று நடத்திக்கொண்டிருந்தபடியால் விளையாட்டுகள் அங்கு எடுபடவில்லை. காலங்காலமாக அவர்களுக்குத் தெரிந்த விளையாட்டிலேயே ஈடுபட்டுத் திருப்திப்பட்டுக் கொண்டனர். ‘ஒலிம்பிக்’ போட்டிகளைப் பற்றிக் கேள்விப்பட்டதோடு சரி.

"நீ இப்படி ஓடுவதற்கு முன்னே சில அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் – நானும் ஒரு காலத்தில் ஓடினேன். அதைத் தொடரவில்லை. எனது அந்தக் கால வயதுத் திறனைவிட நீ அதிகமாக இப்போது பெற்றிருக்கிறாய். ஒன்று செய்யலாம், கேட்பாயா?” அவன் தலையசைத்தான். “நான் தரும் முகவரிக்குப் போ. அந்த பெரியவரோடு பேசு. உனக்கு நல்லது கிடைக்கும்.” அந்தக் காவலரின் யோசனைக்கு அவன் பதிலும் நன்றியும் திருப்திகரமாகச் சொல்லியிருக்க முடியாது. ஆனாலும் அவர் ஒரு முகவரியைக் கொடுத்து உற்சாகப்படுத்தி அவனை அனுப்பிவைத்தார்.

அவன் மறுநாள் இரண்டு மைல் தூரத்திலிருந்த அந்த வீட்டிற்குச் சென்றான். வீட்டின் முகவாயிலில் நாற்காலியில் செடிகள் சூழ்ந்த இடத்தில் அவர் உட்கார்ந்திருந்தார். பெரியவர் அவனை எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால் வருபவனுடைய நடை அவருக்கு எதையோ ஞாபகப்படுத்தியிருக்கவேண்டும். தூரத்தில் வந்துகொண்டிருந்தவனை ஆவலுடன் பக்கத்தில் காண விழைந்தார். "ஏன் இத்தனை நாள்....முன்பே ஏன் வரவில்லை?" என்று கேட்கவும் எண்ணினார். "நமது நாடு பாழ்பட்டுவிட்ட நாடு. இதை இளைஞர்கள்தாம் காக்கவேண்டும், இல்லையா?" என்று இரைந்து கேட்டார்.

பெரியவருக்கு வயது அறுபதிருக்கும். விளையாட்டு விஷயங்களிலேயே தன்னை மூழ்கடித்துக்கொண்டவர். அவற்றைத் தவிர உலகிலுள்ள எல்லாக் காரியங்களையும் இயந்திரங்களைக்கொண்டு நிகழ்த்திவிடலாம் என்று நம்புகிறவர். "நான் எனது நாட்டிற்காக என் விளையாட்டுக் கலையை அர்ப்பணித்தவன்." அவர் கண்கள் ஜொலித்தன. உண்மையில் அந்தக் கண்களில் அவர் சொன்னது தெரிந்தது. அவர் பொய் சொல்பவராகத் தெரியவில்லை.

பல மாதங்கள் அவரிடம் தனது விளையாட்டுக்கலையின் பயிற்சிகளைப் பெற்றான் அவன். காலையில் எழுந்து, சூரியன் உதிக்கும் முன்னர் நெடுஞ்சாலைகளில் ஓடினான். தனது தம்பியைத் தோளில் ஏறச் சொல்லி அவனைத் தூக்கிக்கொண்டு மைல் கணக்கில் ஓடிப் பயிற்சி பெற்றான். பிற நாட்டு வீரர்கள், போட்டிகள்பற்றி அவ்வீட்டிலேயே திரைப்படங்கள் காட்டப்பெற்றன. அவன் அந்த நாட்டின் சிறந்த ஓட்டப்பந்தய வீரனாக ஆக்கப்பட்டான்.

ஒரு தடவை மல்யுத்தப் போட்டிகளின் வீடியோவைப் பார்த்துக்கொண்டிருக்கையில் பெரியவர் அந்த இரு நாடுகளைப்பற்றி விளக்கினார். அவன் கண்டு கேட்டறியாத சங்கதிகள் – நாடு – மக்கள் இனங்கள் – இவற்றைப் பற்றிய உணர்வுபூர்வமான விளக்கம் – ஏறக்குறைய ஒரு சொற்பொழிவு. அவன் மீண்டும் அந்த வீடியோ காட்சிகளில் ஆழ்ந்தான்.

போட்டியினிடையே காட்டப்பெறும் மக்களின் ஆரவாரம் அவனுக்குப் புதிதல்ல. இருப்பினும் வேற்று நாட்டுக்காரன் குத்து வாங்கி மூக்கு நிறைய இரத்தம் வழிகையில் பார்த்தவர்களின் சப்தம் இடையே ஒரு பார்வையாளன் முடித்துவிட்ட தனது சிகரெட் துண்டை ஆக்ரோஷத்துடன் கீழே நசுக்கித் துவம்சம் செய்தல்... இவ்வகைக் காட்சிகளைக் கண்டு முடிக்கையில் அவன் தனக்குள் ஏதோ ஒன்று ஏற்பட்டிருப்பதாக உணர்ந்தான். அது பயம் என்று பின்னர்த் தெரிந்துகொண்டான்.

அன்றிரவு தொலைக்காட்சியில் "இந்த நாட்டின் நம்பிக்கை நட்சத்திரம்" என அவன் அறிமுகப்படுத்தப்பட்டான். அவனது படம் நன்றாக இருந்ததாகப் பலர் சொன்னார்கள். அவ்வாறு சொன்னது பொய்யென்று அவனுக்குத் தோன்றிற்று.

நெடுஞ்சாலைகளில் அவனது அதிகாலை ஓட்டம் தொடர்ந்தது. மைதானங்களில் ஓடுவதைவிட இதைச் சிறந்ததாகக் கருதினான். அடிவானத்தைப் பார்த்தவாறு, இரு பக்கங்களிலும் மரங்கள் தன்னைக் கடந்து செல்ல, கால்கள் மாறி மாறித் தரையைத் தொட்டு ஓடுகையில் இதுவரை ஆபாசம் என்று அவன் கருதிக்கொண்டிருந்தவை யாவும் தன்னைவிட்டு அகலச் சுத்த சுயம்புவாக எங்கோ சென்றுகொண்டிருப்பதாக உணர்ந்தான். வானமும் தரையும் சுற்றுப்புற சீவராசிகளும் தானும் வெவ்வேறல்ல என்று தெளிந்த வகையில் அவன் ஓட்டமிருந்தது. நெடுஞ்சாலையில் ஓட முடியாதபோது அந்த வீட்டைச் சுற்றி ஓடுவான். ஓட்ட அளவை நாளறிக்கையில் குறித்துக்கொண்டே பெரியவர் பலவித கணக்குகளைப் போட்டுப் பார்ப்பதை அவன் காண்பான். இத்தனை தூரம் தொடர வேண்டியதில்லை என்றும் உலக ரிக்கார்டை அவன் நெடுஞ்சாலைகளிலேயே முறியடித்துவிட்டான் என்றும் சொல்லி மகிழ்வார்.

"ஒரு மராத்தன் தேறிவிட்டான்" என்றும் "இந்த நாடு தலை நிமிரும்" என்றும் ஆணித்தரமாகப் பத்திரிக்கை நிருபர்களிடம் கூறினார். அவன் இருபத்தேழு மைல்கள் ஓடித் தொலைக்காட்சியிலும் செய்திகளிலும் அடிபட்டபோது உலக நாடுகள் அவனைக் கவனிக்கத் தொடங்கிவிட்டன. அடுத்த ஒலிம்பிக் வீரனெனப் பேசப்படுபவர்களில் ஒருவனானான். ஐரோப்பிய நாடுகளில் அவன் 'கிரிப்ஸ்'. கிழக்கே அவனைக் 'கிருஷ்' என்று சொல்லியிருப்பார்கள். தென்புலத்தில் 'கருப்பன்' என்று இருந்திருக்கக்கூடும்.

விளையாட்டரங்கு ஒன்றில் பத்திரிக்கையாளர் பேட்டி நடந்தது. கையில் ஒரு சுருட்டுடன் பெரியவர் சிறிது தூரத்தில் உட்கார்ந்திருந்தார். பேட்டி பின்வருமாறு இருந்தது.
"நீங்கள் போட்டியிடும் வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் மகிழ்ச்சிதானே?"
"எனக்கு ஓடுவதில் ரொம்பவும் மகிழ்ச்சி."
"நமது நாட்டிற்குப் பெருமை தேடித் தருவீர்கள் அல்லவா?"
"ஓடுவது ரொம்பவும் நன்றாகவிருக்கிறது."
"போன ஒலிம்பிக்கில் வென்ற வீரர் பற்றி உங்கள் கருத்து?"
"ஓடுபவர்கள் எல்லோருமே மகிழ்ச்சியடைவார்கள். அவர்கள் எல்லாரையும் நினைத்தால் நான் சமாதானமடைகிறேன்."
"நமது நாடு விளையாட்டில் முன்னேறுமா?"
அவன் பேசாதிருந்தான். பெரியவர் தலைகுனிந்திருந்தார். கேள்வி திரும்பவும் கேட்கப்பட்டது.
"எனக்கு ஓட மட்டுமே தெரியும். அதிலே எனக்குக் கிடைப்பதுதான் நான் ஓடுவதற்குக் காரணம். நான் எனக்காகவே ஓடுகிறேன். ஓட்டத்தின் சிறப்புத்தான் அதன் காரணம். எனக்கு வேறெதுவும் தெரியாது."
பெரியவர் கையிலிருந்த சுருட்டு காலடியில் கிடந்தது. முகம் பல மேடு பள்ளங்களாக மாறக் காலால் சுருட்டை நசுக்கித் தள்ளினார். பின்பு மெதுவாகக் கைகளைத் தளரவிட்டு எழுந்து நின்றார். அப்போது பேட்டி முடிந்துவிட்டது.

சிறிய நிலவுடன் இரவு முன்னேறுகின்ற நேரம். அந்தக் கட்டடத்தின் வெளியே வண்டியருகே நின்றுகொண்டிருந்த அவர் பக்கம் வந்து நின்றான் அவன். சிறிது நேரம் வெட்ட வெளியைப் பார்த்துக்கொண்டிருந்தார் பெரியவர். பின்னர்த் தோள்களைக் குலுக்கிக் கொண்டே காரின் கதவைத் திறந்தார். அவன் வெகுதூரத்திற்கப்பாலிருந்த குன்றுகளைப் பார்த்தவாறே அவரிடம் கெஞ்சலுடன் கூறினான்.

"அந்த அருமையான நிலவில் ஓட முடிந்தால் எப்படி இருக்கும் என்கிறீர்கள்? காலையில் அந்தக் குன்றுவரை சௌகர்யமாக ஓட்டம் முடிந்தது." பெரியவர் காரின் உள்ளே நுழைந்து உட்கார்ந்து கதவைச் சாத்திக்கொண்டார். தலையை மட்டும் வெளியே நீட்டி "நன்றாக இருக்கும் – வேண்டுமானால் நீ இப்பவே ஓடு. அந்தக் குன்றின் உச்சிக்கே போய் அங்கிருந்து கீழே குதித்துச் செத்துத்தொலை" என்று கூறிவிட்டுக் காரை ஓட்டிச் சென்றுவிட்டார்.

**- மா. அரங்கநாதன்**

*(தேவை கருதிச் சிறுகதை எழுத்தாளரின் குடும்பத்தாரது ஒப்புதலுடன் சிறுகதையின் அளவு குறைக்கப்பட்டுள்ளது.)*

**பின்னிணைப்பு 2**

**கொடுக்கிறேன்...**

கொடுக்கிறேன் என்று நினைப்பவனே!
கொடுப்பதற்கு நீ யார்?
நீ கொடுப்பதாக நினைப்பதெல்லாம்
உனக்குக் கொடுக்கப்பட்டதல்லவா?
உனக்குக் கொடுக்கப்பட்டதெல்லாம்
உனக்காக மட்டும் கொடுக்கப்பட்டதல்ல
உண்மையில் நீ கொடுக்கவில்லை
உன் வழியாகக் கொடுக்கப்படுகிறது
நீ ஒரு கருவியே
இசையைப்
புல்லாங்குழல் கொடுப்பதில்லை
இசை வெளிப்படுவதற்கு
அது ஒரு கருவியே
இயற்கையைப் பார்
அது கொடுக்கிறோம் என்று நினைத்துக்
கொடுப்பதில்லை
தேவையுள்ளவன்
அதிலிருந்து
வேண்டியதை
எடுத்துக்கொள்கிறான்
நீயும் இயற்கையின்
ஓர் அங்கம் என்பதை
மறந்துவிடாதே
கொடுப்பதற்குரியது
பணம் மட்டும் என்று
நினைக்காதே
உன் வார்த்தையும்
ஒருவனுக்குத்
தாகம் தணிக்கலாம்
உன் புன்னகையும்
ஒருவன் உள்ளத்தில்
விளக்கேற்றலாம்
ஒரு பூவைப் போல்
சப்தமில்லாமல் கொடு
ஒரு விளக்கைப் போல
பேதமில்லாமல்
கொடு
உன்னிடம் உள்ளது
நதியில் உள்ள நீர்போல்
இருக்கட்டும்
தாகமுடையவன் குடிக்கத்
தண்ணீரிடம்

சம்மதம் கேட்பதில்லை
கொடு
நீ சுத்தமாவாய்
கொடு
நீ சுகப்படுவாய்
கொடு
அது உன் இருத்தலை
நியாயப்படுத்தும்

- **கவிக்கோ அப்துல் ரகுமான்**

*Copyright Acknowledgements:*

Singapore Examinations and Assessment Board has made every effort to trace copyright holders, but if we have inadvertently overlooked any, we will be pleased to make the necessary arrangements at the first opportunity.